1975 அக்டோபர் 25] [திரு. க. இராசாராம்]

பிரச்சனை என்ற முறையில் இது அவ்வளவும் இணைந்து இருக்கின்றன. இந்த நிலையில் தொழிலாளர்கள்—தொழிலதிபர்கள் என்று இப்போது நடைபெறும் இருதரப்புப் பேச்சுக்களை அரசாங்கம் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் இன்னும் உற்பத்தியாளர்கள் இவர்களையெல்லாம் கூட்டி வைத்து, விவசாயத் துறை அமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு கரும்பு உற்பத்தியை எந்த வகையில் பெருக்கலாம் என்று ஆராய்ந்து, யாரும் பாதிக்கப்படாமல், அதிக உற்பத்திக்கான வழி வகைகளைக் காண்பதற்கு இந்த அரசாங்கம் தயங்காது என்று மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் அவசியம் இல்லை என்று கருதி அவற்றுக்கு அனுமதி மறுக்கின்றேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/74) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் வைக்கின்றேன்.

---

* 9—4—1974-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.